தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 13.07.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 7736/SCIC/2024**

திரு. த. மணிகண்டன் - மேல்முறையீட்டாளர்
எண்.53, பெரும்பாக்கம் (கிராமம் (ம) அஞ்சல்)
மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் - 603 306.
கைபேசி.9500409872

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி)
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அச்சிறுப்பாக்கம் ஒன்றியம்-603 306
செங்கல்பட்டு மாவட்டம்.

## ஆணை

| | | |
|---|---|---|
| 1. | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **13.03.2024** |
| 2. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 20.04.2024 |
| 3. | மனுதாரரின் புகார் மனு | 10.06.2024 |
| 4. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பதில் | 10.02.2025 |
| 5. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 25.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 13/03/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலகம், அச்சிறுபாக்கம் ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “தங்கள் அலுவலகத்தில் பணியாற்றும் பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் பணிப்

பதிவேட்டிலிருந்து அவர் பிறந்த தேதி, பணியில் சேர்ந்த தேதி, ஓய்வு பெறும் தேதி, அவரது காலமுறை ஊதியம், தற்போது எந்த ஊதிய விகிதத்தில் அவர் சம்பளம் பெறுகிறார், அவரது அலுவலக முகவரி போன்ற தகவல்கள் " என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (13/07/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திரு. த.மணிகண்டன் அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். மனுதாரரின் வருகையின்மை ஆணையத்தால் பதிவு செய்யப்படுகிறது. பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.க.சீனுவாசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி), அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜராகி, மனுதாரருக்கு 10/02/2025 தேதியிட்டு இனவாரியான தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். அதனை ஆணையம் பரிசீலிக்கையில், இனம் 1-க்கான தகவல் சரியானதல்ல என ஆணையம் முடிவு செய்கிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி), அச்சிறுப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், செங்கல்பட்டு மாவட்டம் அவர்கள் மனுதாரருக்கு இனம்-1-க்கு மட்டும் ஆவணங்களின்படியான, சரியான தகவலினை இவ்வாணை கிடைக்கப் பெற்ற 15 தினங்களுக்குள் விரைவு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பதோடு, அதன் பின்னர், அதன் நகலினை ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன் கீழான 13/03/2024 தேதியிட்ட மனுவிற்கு உரிய காலவரையறைக்குள் தகவல்களை வழங்காமல், மிகுந்த காலதாமதத்துடன் 10/02/2025 தேதியிட்டு தகவல்களை அனுப்பியுள்ளதாகத் தெரிய வருகிறது. **எனவே, பொது அதிகார அமைப்பினை (பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மேல்முறையீட்டு அலுவலர்) ஆணையம் எச்சரிப்பதோடு, இனி வருங்காலங்களில், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் விதிமுறைகளை முறையாக பின்பற்றி, உரிய காலவரையறைக்குள் மனுதாரர்களுக்கு தகவல்களை வழங்க வேண்டுமென்றும், அவ்வாறு தகவல்களை வழங்கத் தவறும் பட்சம், தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது. ஆணையத்தின் அழைப்பாணை அனுப்பப்பட்டு, நேரடி விசாரணையில் பங்கேற்று தனது வாதுரையினை பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டும், இன்றைய விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. எனவே, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA 7736/SCIC/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சி)
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
அச்சிறுப்பாக்கம் ஒன்றியம்-603 306
செங்கல்பட்டு மாவட்டம்.

**<u>மேல்முறையீட்டாளர்</u>**

திரு. த. மணிகண்டன்
எண்.53, பெரும்பாக்கம் (கிராமம் (ம) அஞ்சல்)
மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம் - 603 306.
கைபேசி.9500409872

RG/Sr.PC